செய்தி வெளியீடு எண்:618 நாள்: 23.12.2016

## தமிழ் வளர்ச்சித் துறை

## செய்திக் குறிப்பு

தமிழ் வளர்ச்சித் துறையால் சென்னை மாவட்ட அளவிலான கல்லூரி மாணவர்களுக்கு 2016–2017ஆம் ஆண்டிற்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 23.12.2016ஆம் நாளன்று சென்னை காயிதே மில்லத் மகளிர் கலைக்கல்லூரியில் நடத்தப்பெற்றது. இதில் **கவிதைப் போட்டியில்** எழும்பூர் எத்திராஜ் மகளிர் கல்லூரியில் முதுகலை முதலாமாண்டு விலங்கியல் மாணவி செல்வி சே. ஸ்ரீதேவி முதல் பரிசையும், தேனாம்பேட்டை நீதிபதி பசீர் அகமது சையது மகளிர் கல்லூரி இளங்கலை அரசியல் அறிவியல் மூன்றாமாண்டு மாணவி செல்வி இர. ஐஸ்வர்யா இரண்டாம் பரிசையும், இராயப்பேட்டை புதுக்கல்லூரி இரண்டாமாண்டு முதுகலை வேதியியல் பயிலும் மாணவன் செல்வன் மு. திவாகர் மூன்றாம் பரிசையும், **கட்டுரைப் போட்டியில்** கே.கே. நகர் இ.எஸ்.ஐ.சி மருத்துவக் கல்லூரியில் இரண்டாமாண்டு மருத்துவம் பயிலும் மாணவி செல்வி ச. பிரீத்தி முதல் பரிசையும், சென்னை மதராஸ் தொழில்நுட்ப நிறுவனக் கலைக் கல்லூரியில் முதலாமாண்டு மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் பயிலும் மாணவன் செல்வன் க. அருண்பாலாஜி இரண்டாம் பரிசையும், சென்னை, வள்ளியம்மாள் கல்லூரியில் இளம் அறிவியல் உயிர்வேதியியல் பயிலும் மாணவி செல்வி லோ.வைத்தீஸ்வரி மூன்றாம் பரிசையும், **பேச்சுப் போட்டியில்** சென்னை, மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் கல்லூரியில், மூன்றாம் ஆண்டு துணை மருத்துவம் பயிலும் மாணவன் செல்வன் நா.அருண் முதல் பரிசையும், சென்னை துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு இளம் அறிவியல் வேதியியல் பயிலும், மாணவன் செல்வன் மா. மதன் குமார் இரண்டாம் பரிசையும், மயிலாப்பூர், இராணிமேரிக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல் பயிலும் மாணவி செல்வி மோ.காயத்திரி மூன்றாம் பரிசையும் பெற்றனர். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சேவூர் இராமச்சந்திரன் அவர்கள் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்குச் சென்னை மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்(பொ) திரு.ம.சி. தியாகராசன் அவர்கள் வரவேற்புரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர்(பொ) முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையுரையும் ஆற்றினார்கள். ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசு ரூ.10000/–, இரண்டாம் பரிசு ரூ. 7000/–, மூன்றாம் பரிசு ரூ.5000/– ஆகும். மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற மாணவர்கள் மட்டும் மாநில அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வர்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்(பொ)

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**